# 12 ஆண்டுகள்... 4,125 போலீஸ் சஸ்பெண்ட்... 344 பேர் டிஸ்மிஸ்...

# அதிர்ச்சியளிக்கும் ஆர்.டி.ஐ ரிப்போர்ட்!

தமிழ்நாடு காவல்துறையில், கடந்த 12 ஆண்டுகளில், மனித உரிமை மீறலில் ஈடுபட்ட 4,125 பேர் தற்காலிகப் பணிநீக்கமும், 344 பேர் நிரந்தரப் பணிநீக்கமும் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆர்.டி.ஐ மூலம் வெளிச்சத்துக்கு வந்திருக்கும் இந்தத் தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது!

1996-ம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கருணாநிதி, 'காவல்துறையின் ஈரல் அழுகிவிட்டது' என்று விமர்சித்தார். 2018-ம் ஆண்டு, அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலினும் இதே கருத்தை முன்வைத்தார். இந்த நிலையில், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரான எடப்பாடி பழனிசாமியும் 'இந்த ஆட்சியில் காவல்துறை கடும் தோல்வியடைந்திருக்கிறது. ஆட்சியாளர்களின் கைகளில் சிக்கி காவல்துறை சீரழிந்து வருகிறது' எனத் தமிழக காவல்துறையின் செயல்பாடுகளைத் தொடர்ச்சியாக விமர்சித்து வருகிறார். முதலமைச்சர்களாக, காவல்துறையைத் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்த, வைத்திருப்போரின் இந்த வாக்குமூலங்களே போதும், காவல்துறையின் நிலையை மக்கள் புரிந்துகொள்வதற்கு.

### "தகவல் ஆணையம் தரவில்லை... நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகே கிடைத்தது!"

இந்த நிலையில் சமீபத்தில், தமிழக காவல்துறையின் செயல்பாடுகள் குறித்து, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தகவல்களை






vikatan.com



வாங்கியிருக்கும் கோவை சமூகச் செயற்பாட்டாளரும், வழக்கறிஞருமான லோகநாதன் நம்மிடம் பேசியபோது, “காவல் துறையில், சட்டத்தை மீறி மனித உரிமை மீறலில் ஈடுபடுகிறவர்கள்மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வகையில், தமிழக காவல்துறையில் சில விஷயங்களில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பல நேரங்களில் எடுக்கப் படுவதில்லை. எடுக்கப்படும் சில நடவடிக்கைகளும் வெறும் கண்துடைப்பாகவே அமைகின்றன. எனவே, 2010 ஜனவரி முதல் 2021 நவம்பர் வரையிலாக இப்படி நடவடிக்கைகளுக்கு உள்ளானவர்களின் பட்டியலைக் கேட்டு, 2021 டிசம்பரில் தகவல் உரிமை ஆணையத்துக்கு விண்ணப்பித்தேன்.

நான் கேட்டு, 30 நாள்களில் தகவல் வழங்கப்படவில்லை. எனவே, 2022 ஜனவரி மாதம் முதல் மேல்முறையீடு செய்தேன். அதிலும் தகவல் வழங்காததால், 2022 மே மாதம் தகவல் ஆணையத்திடம் 2-வது முறையாக மேல்முறையீடு செய்தேன். அதைத் தொடர்ந்து 2023-ம் ஆண்டு, தகவல்களை வழங்கச் சொல்லி தகவல் ஆணையம் உத்தரவிட்டது. ஆனால், ஆணையம் உத்தரவிட்ட பிறகும்கூட எனக்குத் தகவல் வழங்கப்படவில்லை. எனவே, கடந்த பிப்ரவரி மாதம் சென்னை உயர் நீதிமன்றத்தில் இது குறித்து வழக்கு தொடர்ந்தேன். இந்த வழக்கில், தகவல்களைக் கொடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதன் அடிப்படையில், தற்போது தகவல்களை வழங்கியிருக்கின்றனர்.



லோகநாதன்

### தப்பும் உயரதிகாரிகள்... பலிகடாவாகும் கடைநிலைக் காவலர்கள்!

அந்த வகையில் கடந்த 12 ஆண்டுகளில், 4,125 பேர் தற்காலிகப் பணிநீக்கமும், 344 பேர் நிரந்தரப் பணிநீக்கமும் செய்யப்பட்டுள்ளனர். ஆக, 4,000 பேரில் 300 பேர் மட்டுமே பணியிலிருந்து நிரந்தரமாக நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். அதாவது 10-ல் ஒரு மடங்கு குற்றம்தான் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மற்ற புகார்கள் நிரூபிக்கப்படாததால், மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்கிறார்கள். எனவே, பெரும்பாலா னோர் தப்பிவிடுகிறார்கள். இது போன்ற நடவடிக்கைகளிலிருந்து எப்படித் தப்பிக்க வேண்டும் என்று எல்லோரும் தெரிந்துவைத்திருக்கின்றனர்.

இதிலும்கூட, பெரும்பாலான உயரதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. பெரும்பாலும் கடைநிலையில் பணியாற்றும் காவலர்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதிகபட்சமாக 50 டி.எஸ்.பி-க்கள் தற்காலிகப் பணிநீக்கம் மட்டும் செய்யப்பட்டிருக்கின்றனர். மற்றபடி, நிரந்தரப் பணிநீக்கம் என்பது காவல் ஆய்வாளருடன் முடிந்துவிடுகிறது. ஆனால், நிஜத்தில் பல குற்றங்கள், சட்ட மீறல்கள் உயரதிகாரிகள் உத்தரவின் அடிப்படையில்தான் நிகழ்த்தப் படுகின்றன. அது பிரச்னையானவுடன் கடைநிலையில் இருப்பவர்கள் மட்டும் பலிகடா ஆக்கப்படுகிறார்கள்.


1990-க்கு முன்பு ஆட்கொணர்வு மனு பெரிய அளவில் பயன்படுத்தப்படவில்லை.


சங்கர் ஜிவால்

ஆனால், சமீபகாலமாக நீதிமன்றங்களில் ஒவ்வோர் ஆண்டும் நூற்றுக்கணக்கான ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல்செய்யப்படுகின்றன. காவல்துறை, தன் கடமையைச் சரியாகச் செய்யாத பட்சத்திலேயே, பாதிக்கப்பட்டவர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்கிறார்கள். ஒருவரைக் கைது செய்தால், உறவினர்களுக்குத் தகவலளித்து 24 மணி நேரத்துக்குள் நீதிபதியின் முன்பு ஆஜர்படுத்த வேண்டும். ஆனால், தற்போது கைதுசெய்தாலும் சட்டவிரோத கஸ்டடியில் வைக்கின்றனர். அதில்தான் பல மரணங்கள் நிகழ்கின்றன.

## ஒரு காவல் நிலையத்திலாவது அனைத்து இடங்களிலும் கேமரா இருக்கிறதா?

இது குறித்து, மக்கள் கண்காணிப்பக அமைப்பின் இயக்குநர் ஹென்றி திபேன் பேசும்போது, "இந்த டேட்டாவில் இருப்பது மிகவும் சிறிய அளவிலான எண்ணிக்கைதான். இவர்களெல்லாம் மனித உரிமை மீறல் செய்து தப்பிக்க முடியாதவர்கள், அவ்வளவுதான். இது உண்மையான எண்ணிக்கையாக இருக்க வாய்ப்பில்லை. பல காவல் நிலையங்களில் கைது செய்யப்படுவோர் கழிப்பறையில் விழுந்து காயம் ஏற்படுவதாகக் கூறுகிறார்கள். 'காவல் நிலையத்தின் அனைத்து அறைகளிலும், அனைத்துக் கோணங்களிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தி வீடியோ, ஆடியோ பதிவுசெய்யப்பட வேண்டும்' என்று உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது. அப்படி ஒரு காவல் நிலையத்திலாவது அனைத்து இடங்களிலும் கேமரா இருக்கிறதா... இது குறித்தெல்லாம் முதலமைச்சரோ, துணை முதலமைச்சரோ காவல் நிலையத்தில் ஒரு முறையாவது ஆய்வுசெய்திருக்கிறார்களா... தவறு செய்யும் அதிகாரிகள்மீது உடனடியாகவும் கடுமையாகவும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே, காவல்துறையில் தவறுகள் குறையும்" என்றார் ஆற்றாமையோடு.



இது குறித்து தமிழ்நாடு சட்டம் - ஒழுங்கு டி.ஜி.பி சங்கர் ஜிவாலிடம் பேசினோம். "காவல்துறையில் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள்மீது உரிய துறை விசாரணை நடத்தப்படுகிறது. குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அதற்கேற்ப தண்டனைகளும் வழங்கப்படுகின்றன. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத நிலையில் நடவடிக்கைகள் ரத்துசெய்யப்படுகின்றன. மேலும், விதிமீறல்களில் ஈடுபடுவோர் மீதான அதிகபட்ச தண்டனைகள் கருணையுடன் அணுகப்படுகிறது. பரிசீலனைக்குப் பிறகே அவர்கள்மீதான தண்டனைகள் குறைக்கப்படுகிறது" என்றார் சுருக்கமாக.

'காவல்துறை உங்கள் நண்பன்' என்பது வெறும் வாசகம் மட்டும்தானா?

- குருபிரசாத்

படங்கள்: தி.விஜய், வி.ஸ்ரீனிவாசுலு

## நோ பனிஷ்மென்ட்... ஒன்லி புரொமோஷன்!

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராயச் சாவு விவகாரத்தில், அந்த மாவட்ட எஸ்.பி சமய்சிங் மீனா தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டார். இரண்டு மாதங்களிலேயே அவரது நீக்கம் ரத்துசெய்யப்பட்டு மீண்டும் பணியமர்த்தப்பட்டார். தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம், 27 காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்தது. ஆனால், அப்போது தென்மண்டல ஐ.ஜி-யாக இருந்த சைலேஷ் குமார் உள்ளிட்டோருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. விசாரணைக்கு வந்தவர்களைத் தாக்கி பற்களைப் பிடுங்கியதான புகாரில், நெல்லை ஏ.எஸ்.பி பல்வீர் சிங் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். அடுத்த சில மாதங்களிலேயே அவரது பணிநீக்கம் ரத்துசெய்யப்பட்டது. திருப்பூர் சாமளாபுரம் பகுதியில் டாஸ்மாக்குக்கு எதிராகப் போராடிய பெண்ணின் கன்னத்தில் அறைந்து சர்ச்சையில் சிக்கினார் அப்போதைய ஏ.டி.எஸ்.பி பாண்டியராஜன். இருப்பினும், அவருக்கு அடுத்தடுத்து பதவி உயர்வுகள் தேடிவந்தன. கோவை மாவட்ட எஸ்.பி-யான பிறகு நாட்டையே அதிரவைத்த பொள்ளாச்சி பாலியல் வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் அடையாளத்தை வெளியிட்டு மீண்டும் சர்ச்சையில் சிக்கினார் பாண்டியராஜன். இருப்பினும், தற்காலிகமாக அவரைக் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி, சில மாதங்களில் மீண்டும் பதவி வழங்கினார்கள்!